ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1783/26 - 2012 නොවැම්බර් මස 08 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.11.08

*1783/26 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ- 6/78*

**தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேயிலைச் சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்திச் சட்டம்**

*1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேயிலைச் சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்திச் சட்டத்தின் 15 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 22 ஆம் பிரிவின் கீழ் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.*

*மஹிந்த சமரசிங்க,*
*பெருந்தோட்டக்*
*கைத்தொழில்கள் அமைச்சர்.*

*கொழும்பு.*

**ஒழுங்குவிதிகள்**

*2001 ஆம் ஆண்டு நவெம்பர் 5 ஆந் திகதிய 1209/9 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2011 ஆம் ஆண்டு ஏப்பிறல் 11 ஆந் திகதிய 1701/1 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான 1989 ஆம் ஆண்டு செத்தெம்பர் 22 ஆந் திகதிய 576/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான 1989 ஆம் ஆண்டின் தேயிலைச் சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை (தேயிலைப் பயிர்நடுகை) மானிய ஒழுங்குவிதிகளானவை இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது.*

*1. அதன் 3 ஆம் ஒழுங்குவிதிக்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன்மூலமும் :-*

*"3 (1) 2012, சனவரி மாதம் 1 ஆந் திகதியிலிருந்து பயனுறும் வகையில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் மீது தாவரமாக விருத்தி செய்யப்படும் தேயிலைச் செடிகளை நடுகை செய்வதற்கும் பொருத்தமான தேயிலைச் சிறு பற்றுநிலமொன்றின் அல்லது வேறு தேயிலைப் பற்றுநிலத்தில் முழுமையாக அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பகுதியாக கொடுக்கப்படற்பாலனதான மானியத் தொகையானது நடுகை செய்யப்படவேண்டிய இடப்பரப்பிலுள்ள ஒவ்வொரு ஹெக்டேயர் தொடர்பிலும் 1,50,000 ரூபாவாதல் வேண்டுமென்பதுடன் பின்வரும் முறையில் கொடுக்கவும்படலாம்.*

*(அ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் முதலாவது தவணைக் கொடுப்பனவாக 50,000 ரூபா தேயிலை நடுகை செய்யப்படவுள்ள இடப்பரப்பில் தற்போதுள்ள தேயிலைச் செடிகளை அல்லது வேறு தாவரங்களை முற்றாக அகற்றுவதற்கும் அவசியமான மண்ணைப் பேணும் வழிமுறைகளை ஏற்றுக்கொள்வதற்கும் கொடுக்கப்படலாம் ;*

(ஆ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் இரண்டாவது தவணைக்கொடுப்பனவாக 15,000 ரூபா தேயிலை நடுகை செய்யப்படவுள்ள இடப்பரப்பிலுள்ள மண்ணை மறுசீரமைப்பதற்காக புல் வளர்ப்பதற்காக ஆறு (06) மாதங்களின் பின்னர் கொடுக்கப்படலாம் ;

(இ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் மூன்றாவது தவணைக் கொடுப்பனவாக 15,000 ரூபா தேயிலை நடுகை செய்யப்படவுள்ள இடப்பரப்பிலுள்ள மண்ணை மறுசீரமைப்பதற்காகவும் புல் வளர்ப்பதற்காகவும் பதினெட்டு (18) மாதங்களின் பின்னர் கொடுக்கப்படலாம் ;

(ஈ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் நான்காவது தவணைக் கொடுப்பனவாக 70,000 ரூபா தேயிலை நடுகையைப் பூர்த்தி செய்வதற்குக் கொடுக்கப்படலாம்.

(2) 2012, சனவரி மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னரான விருத்தி செய்யப்படும் தேயிலைச் செடிகளை நடுகை செய்வதற்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் கொடுக்கப்படும் மானியத் தொகையானது அதில் குறித்துரைக்கப்பட்ட முறையில் கொடுக்கப்படலாம் என்பதுடன் அத்தகைய அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் நேரத்தில் குறித்துரைக்கப்பட்ட அதே முறையில் அதன் வலிதாந்தன்மை முடிவுறாதிருத்தல் வேண்டும்.".

2. அதன் 4 ஆம் ஒழுங்குவிதிக்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன்மூலம் :-

"4 அதிகார சபையினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கிணங்க நிலமானது ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளவிடத்து தேயிலைச் சிறு பற்றுநிலம் அல்லது வேறு தேயிலைச் சிறு பற்று நிலம் முழுவதிலும் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பாகத்தில் தாவர முறையில் வளர்க்கப்படும் தேயிலைச் செடிகளை மீள்நடுகை செய்வதற்கு கொடுக்கப்படற்பாலதான மானியத் தொகை இடப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டேயர் தொடர்பிலும் 3,000,000 ரூபாவாதல் வேண்டுமென்பதுடன் பின்வரும் முறையில் ஐந்து தவணைக் கொடுப்பனவுகளில் கொடுக்கவும்படலாம் :-

(அ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் முதற் தவணைக் கொடுப்பனவாகிய 80,000 ரூபா தேயிலை நடுகை செய்யப்படவுள்ள இடப்பரப்பில் தற்போதுள்ள தேயிலைச் செடிகள் மற்றும் வேறு தாவரங்களை முற்றாக அகற்றுவதற்கும் அவசியமான மண்ணைப் பேணும் வழிமுறைகளை ஏற்றுக் கொள்வதற்குக் கொடுக்கப்படலாம்;

(ஆ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் இரண்டாவது தவணைக் கொடுப்பனவாக 30,000 ரூபா தேயிலை மீள்நடுகை செய்யப்படவுள்ள இடப்பரப்பிலுள்ள மண்ணை மறுசீரமைப்பதற்காக புல் வளர்ப்பதற்கு ஆறு (06) மாதங்களின் பின்னர் கொடுக்கப்படலாம் ;

(இ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் மூன்றாவது தவணைக் கொடுப்பனவாக 45,000 ரூபா தேயிலை மீள்நடுகை செய்யப்படவுள்ள இடப்பரப்பிலுள்ள மண்ணை மறுசீரமைப்பதற்காக புல் வளர்ப்பதற்காக பதினெட்டு (18) மாதங்களின் பின்னர் கொடுக்கப்படலாம் ;

(ஈ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் நான்காவது தவணைக் கொடுப்பனவாக 1,15,000 ரூபா தேயிலை நடுகையைப் பூர்த்தி செய்வதற்குக் கொடுக்கப்படலாம் ;

(உ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் ஐந்தாவது தவணைக் கொடுப்பனவாக 30,000 ரூபா ஒரு ஆண்டுக் காலப்பகுதிக்கு மீள்நடுகை செய்யப்பட்ட தேயிலைச் செடிகளை திருப்பதிரகமாக பராமரிப்பதற்கு கொடுக்கப்படலாம்.".

3. அதன் 5 ஆம் ஒழுங்குவிதிக்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன்மூலமும் :-

"5 (1) 2012, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து பயனுறும் வகையில் தேயிலைச் சிறு பற்றுநிலங்களில் மீள்நடுகைக்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் மானியத்தொகையானது 4 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களுக்கமைய கொடுக்கப்படலாம் :-

(2) 2012, சனவரி 01 ஆந் திகதிக்கு முன்னரான விருத்தி செய்யப்படும் தேயிலைச் செடிகளை சிறுபற்று நிலங்களில் மீள்நடுகை செய்வதற்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் கொடுக்கப்படும் மானியத்தொகையானது அதில் குறித்துரைக்கப்பட்ட முறையில் கொடுக்கப்படலாம் என்பதுடன் அத்தகைய அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் நேரத்தில் குறித்துரைக்கப்பட்ட அதேமுறையில் அதன் வலிதாந்தன்மை முடிவுறாதிருத்தல் வேண்டும்.".

4. அதன் 6 ஆம் ஒழுங்குவிதிக்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன்மூலமும் :-

"6 நடுகை செய்யப்படவுள்ள அல்லது மீள்நடுகை செய்யப்படவுள்ள இடப்பரப்பு விஸ்தீரணத்தில் ஒரு ஹெக்டேயருக்கும் குறைவான இருக்குமிடத்து அல்லது அவ்வாறான இடப்பரப்பு ஒரு ஹெக்டேயருக்கு குறைந்த ஒரு பகுதியினை உள்ளடக்கியிருக்குமிடத்து மானியத்தைக் கணிப்பிடுகையில் அவ்விடப்பரப்பின் விஸ்தீரணத்திற்கு அல்லது பகுதிக்கு ஏற்புடைத்தாகின்றவாறு 3 ஆம் ஒழுங்குவிதியின் அல்லது 4 ஆம் ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியிலும் (2) ஆம் பந்தியிலும் குறித்துரைக்கப்பட்ட வீதங்கள் இடப்பரப்பின் அத்தகைய விஸ்தீரணமானது அல்லது பகுதியானது ஒரு ஹெக்டேயருக்கு எந்த விகிதாசாரத்திற்கு பொறுப்பிலிருக்க வேண்டுமோ அந்த விகிதாசாரத்தில் ஏற்புடைத்தாதல் வேண்டும்.".

5. அதன் 8 ஆம் ஒழுங்குவிதிக்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன்மூலமும் :-

"8 அதன் 3 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் அல்லது 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் அல்லது 5 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் கொடுக்கப்படவேண்டிய மானியத் தவணைக் கொடுப்பனவானது முற்கொடுப்பனவாக அல்லது மூலப்பொருள் உதவியாக முழுமையாக அல்லது பகுதியாக கொடுக்கப்படலாம்.".

11- 865

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.